Source: *Tamil Murasu*, p3
Date: 27 June 2019

# ஆய்வு: மசேநிதி பங்களிப்பு விகித உயர்வு சேமிப்பை அதிகரிக்கும்

முதிய ஊழியர்களுக்கான மத்திய சேமநிதி பங்களிப்பு விகிதத்தை இளைய ஊழியர்களின் விகிதத்தின் அளவுக்கு உயர்த்துவதன் மூலம், ஓய்வு பெறும்போதும் அவர்களால் $31,000 முதல் $145,000 அதிகமாக சேமிக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளார்.

கொள்கை ஆய்வுக் கழகம் நேற்று வெளியிட்ட அறிக்கையின் படி, கடந்த ஆண்டு 55 வயதை எட்டியவர்களுக்கு 65 வயதாகும் வரையில் அவர்களது மசேநிதி பங்களிப்பு விகிதம் 37% ஆக இருந்தால், அவர்களது வருமானத்தைப் பொறுத்து அவர்களது சாதாரண கணக்கு, சிறப்புக் கணக்குகளில் அதிகம் சேமிக்க முடியும். தற்போது இந்த பங்களிப்பு விகிதம் 55 வயது வரையில் 37%, 55 முதல் 60 வரையில் 26%, 60 முதல் 65 வரையில் 16.5%, 65 வயதுக்கு மேல் 12.5% என்றுள்ளது.

எனினும், இது முதலாளிகள் சம்பளச் செலவை அதிகரிக்கும், ஊழியர்களின் கையில் கிடைக்கும் வருமானமும் குறையும். இந்த மாற்றத்தினால் முதலாண்டில் முதலாளிகளின் சம்பளச் செலவு $800 மில்லியன் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைச் சமாளிக்க முதலாளிகள் தற்காலிக மானியங்களைப் பயன்படுத்தலாம் என்று ஆய்வு பரிந்துரைத்துள்ளது.

Source: Tamil Murasu© Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.